04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

## சண்முகா கல்லூரியில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி கணிதவியல் துறை சார்பாக மாநில இணைய வழி கருத்தரங்கம்

வெள்ளி விழா ஆண்டு கொண்டாடிவரும் திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில், முதுகலை மற்றும் ஆராய்ச்சி கணிதவியல் துறை (ம) IQAC சார்பாக மாநில அளவிலான இணையவழி கருத்தரங்கம் **“பஷி உட்கணங்களின் செயல்பாடுகள் (Operations on Fuzzy Subsets)”** என்ற தலைப்பில் **18.09.2021** அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து,** பொருளாளர் **எம்.சீனுவாசன்** மற்றும் கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்,** கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக கணிதத்துறைத்தலைவர் மற்றும் IQAC ஒருங்கிணைப்பாளர் முனைவர் **பி.முருகன்** அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினரை கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் **ஆர்.மேகநாதன்** அறிமுகம் செய்தார்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக கடலூர், புனித ஜோசப் கலை அறிவியல் கல்லூரியின் கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் **S.அஞ்சால்மோஸ்** அவர்கள் கலந்து கொண்டு **பஷி உட்கணங்கள்** உருவான விதம் குறித்தும், அவற்றின் செயல்முறைகள் மற்றும் சமூகத்தில் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் பல்வேறு கல்லூரிகளைச் சார்ந்த துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் இணைய வழியில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கணிதத்துறைப்பேராசியர்கள் மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர். மேலும் நிகழ்ச்சியின் நிறைவாக கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் **வி.கோபிகிருஷ்ணன்** நன்றியுரையாற்றினார்.

செயலர் மற்றும் தாளாளர்